பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 23 உ வெள்ளிக்கிழமை (09 - 11 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 20 கதிர்: 247

# அரசை அமைக்க ராஜீவ் பின்னடிப்பு!

## நேற்று நள்ளிரவு வரையில் சந்திரசேகருக்கு அழைப்பு இல்லை

புதுடில்லி, நவம்பர் 9

வி.பி.சிங்கின் தேசிய முன்னணி அரசு நேற்று முன்தினம் பதவியிழந்ததை அடுத்து இந்திய நாடாளுமன்றத்தில் அதிக உறுப்பினர்களைக் கொண்ட தனிக்கட்சியான இந்திரா காங்கிரஸின் தலைவர் ராஜீவ் காந்தியை புதிய அரசை அமைக்க முடியுமா என ஜனாதிபதி வெங்கட்ராமன் நேரில் கேட்டார்.

ஆனால் புதிய அரசமைக்க ராஜீவ்காந்தி பின்னடித்து விட்டார்.

ராஜீவ்காந்தி நேற்றுக் காலையில் ஜனாதிபதியை அவரது இல்லத்தில் சந்தித்த போதே ஜனாதிபதி இவ்வாறு கேட்டார்.

ஆனால் ராஜீவ்காந்தி பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் —

''அரசை அமைப்பதற்கு மக்கள் ஆணையை எனது கட்சி முற்றாகப் பெறவில்லை. மக்கள் ஆணையின்றி அரசு அமைக்க எனது கட்சி விரும்பவில்லை''—என்றார்.

இதனிடையில்-

பாரதிய ஜனதா கட்சித் தலைவர் எல். கே. அத்வானியை ஜனாதிபதி அழைத்து, ஆட்சியை அமைக்க அவர்களால் முடியுமா என்று வினாவினார்.

அதற்கு இயலாது என்று கூறிய அத்வானி உடனடியாக நாடாளுமன்றத்தைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வி. பி. சிங் காபந்து பிரதமர்

புதிய அரசு அமைக்கப்படும் வரை காபந்து பிரதமராக நீடிக்கும்படி ஜனாதிபதி வெங்கட்ராமன் திரு. வி.பி. சிங்கை கேட்டுக்கொண்டார்.

திரு. சிங் அதனை ஏற்றுக் கொண்டார்.

ஜனாதிபதியிடம் போபர்ஸ் பீரங்கி ஊழல்கள் பற்றிய பைல்களை கொடுத்தீர்களா? – என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, ''அரசாங்க இரகசியங்கள் வெளியிடப்படமாட்டா'' – என்று மட்டும் திரு. சிங் பதிலளித்தார்.

(ஓ-எ)

## யாழ். செயலகத்துக்கு ரூ. 5 கோடி கட்டுநிதி

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். மாவட்டத்தில் முக்கிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக ஐந்து கோடி ரூபா கட்டுநிதி திறைசேரியால் இலங்கை வங்கி மூலம் யாழ். செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இத் தகவலை கொழும்பிலிருந்து அறிவித்திருக்கிறார்.

ஓய்வூதியம், ஊழியர்கள் வேதனம் உட்பட மற்றும் முக்கிய கொடுப்பனவுகள் இந்த நிதி மூலம் வழங்கப்பட இருக்கின்றன.

யாழ். செயலகக் கொடுப்பனவுகளுக்கு ஒரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் கடற் பகுதியில்

## படையினர் வந்த படகு மீது புலிகள் ஆர். பி. ஜி. தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 9

நேற்று முன்தினம் காலை 8. 30 மணியளவில் மன்னார் மாவட்டம் குதிரைமலைக் கடல் பகுதியில் [புத்தளம் முள்ளிக்குளம் கடற்பகுதியில்] 2 படகில் படையினர் வந்த போது அவர்கள் மீது விடுதலைப்புலிகள் ஆர். பி. ஜி. தாக்குதல் நடத்தினர்.

கரையிலிருந்து 500 யார் தூரத்தில் வைத்து இரண்டாவதாக வந்த படகு மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் —

அதனையடுத்து அந்தப் படகு நகராமல் நின்றதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன,

முன்னால் வந்த படகு சேதமுற்ற படகை கட்டி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆஸ்பத்திரி பாதுகாப்பு பகுதி




செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பொறுப்பேற்றதை அடுத்து யாழ். போதனா ஆஸ்பத்திரி மீண்டும் இன்று முதல் நகரில் — பழைய இடத்தில்— இயங்கத் தொடங்குகிறது.

யாழ். ஆஸ்பத்திரியைச் சூழவுள்ள குறிப்பிட்ட பகுதிகள் அடங்கிய பிரதேசம் பாதுகாப்புப் பகுதியாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாதுகாப்புப் பகுதியின் எல்லைகள், வரைபடத்தில் தடித்த கோட்டினால் காட்டப்பட்டுள்ளன.

[ஓ]

## நோயாளரைப் பார்வையிட "பாஸ்" முறை அமுலாகும்

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். போதனா ஆஸ்பத்திரி இன்று முதல் மீண்டும் நகரில் இயங்குகிறது. புதிய நோயாளரும் இன்று தொடக்கம் அனுமதிக்கப்படுவர்.

நோயாளர்களைப் பார்வையிடுவோர் ''பாஸ்'' பெற வேண்டும். ''பாஸ்'' இல்லாமல் எவரும் வார்ட்டுகளுக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஒரு நோயாளருக்கு பார்வையாளர் 'பாஸ்' ஒன்று மட்டுமே வழங்கப்படும். அதனைப் பயன்படுத்தி நோயா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வளைகுடாவில் போர் மேகம்; யுத்தம் எப்போதும் மூளலாம்!

லண்டன், நவ. 9

வளைகுடாவில் போர் மேகங்கள் சூழ்ந்து வருகின்றன. எவ்வேளையிலும் போர் வெடிக்கும் பேராபத்து நாளுக்குநாள், நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து வருகிறது.

வளைகுடாவிலுள்ள 3 லட்சம் அமெரிக்கத் துருப்புக்களை அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு. ஜேம்ஸ் பேக்கர் கடந்த சில தினங்களுக்கு முன் அங்கு சென்று சந்தித்தார்.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்ரட் தட்சரும், ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனுக்கு இறுதி எச்சரிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தீப்பெட்டி விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 9

தீப்பெட்டியின் விலையில் நேற்று திடீர் வீழ்ச்சி ஏற்பட்டது.

குடாநாட்டுக்கு வந்த லொறிகளில் ஏராளமான தீப்பெட்டிகள் நேற்று கொண்டுவரப்பட்டதை அடுத்தே விலை வீழ்ச்சி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஓ-3-5]

## டாக்டர்கள் ஹோட்டலில் தங்க வசதி

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் அருகிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள வைத்தியர்கள்விடுதி சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது.

## குறிகட்டுவான் கடலில் மீனவர் மீது கடற்படை சூடு

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் குறிகட்டுவான் கடல் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் —

அதனால் சில மீனவர்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்ததாகக் கருதப்படும் ஒருவரின் சடலம் சூட்டுக்காயங்களுடன் கரை ஒதுங்கியது என்றும் தெரிவிக்கப்பட்டது.

[உ]

## மாவிட்டபுரம் பகுதியில் பொம்மர் குண்டு வீச்சு!

### அம்மன் கோவில் சேதமானது

மாவிட்டபுரம் பகுதியில் நேற்றுக் காலை 7. 30 மணியளவில் பொம்மர்கள் குண்டு வீச்சு தாக்குதல்களை நடத்தின.

குண்டு வீச்சில் அரசடி வீதியிலுள்ள மாரியம்மன் கோவிலும் சேதமடைந்ததாக அறியவந்தது.

தேவேளை —

நேற்றுக் காலை மாவிட்டபுரம், தெல்லிப்பழைப் பகுதிகளில் ஹெலித் தாக்குதலும் இடம்பெற்றது.

(ஓ-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். [14550]

### வண்ணப் பதிப்பு

பாலர் பாடசாலை ஆசிரியைகள் கவனத்துக்கு: அஷ்டலக்ஷ்மி பாலர் தமிழ் சீர்திருத்த எழுத்துக்களுடன் (வண்ணப் பதிப்பு) விற்பனையாகின்றது. விலை ரூபா 12/-; ஆட் பேப்பரில் ரூபா 15/-. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, மண்டேலா ரேடர் நல்லூர், அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. [14713]

சீர்திருத்த எழுத்துக்களுடன் பாலர்தமிழ் (வண்ணப் பதிப்பு) ரூபா 12/-; ஆட் பேப்பரில் ரூபா 15/-; வியாபாரிகளுக்கு கழிவு 15% நேரில் வருக: அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. (14714)

### விண்ணப்பப் படிவங்கள்

மொறட்டுவை பல்கலைக் கழக அனுமதிக்கான படிவம் யாழ் தொழில் நுட்பக் கல்லூரிக்கான படிவம், திறமை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு மூலம் இலங்கை அதிபர்கள் சேவை தரம் II இற்கான படிவம் யாவற்றிற்கும் நாயக பாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (சி/5386)

சுய விருப்பத்தில் இளைப்பாறும் ஊழியர்களுக்கான படிவம், விபரம் விலை ரூபா 1/- விற்பனையாகின்றது. பெறவிரும்புவோர்நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். விபரங்களையும் பார்வையிடலாம். தொடர்பு நாயகபாலன் ஸ்ரோர்ஸ். மானிப்பாய். (சி/5385)

### தேவை

சிமெந்து, கோழித்தீன் வெற்றுப் பைக்கெற்றுக்கள் தேவை. மிக்வைற் யாழ்ப்பாணம். (சி- 5388)

### டில்கா வாச் வேக்ஸ் [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையிலும் 3, சித்தன் சேணி வீதி, பண்டத்தரிப்பிலும்இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும்,றேடியோக்களும்உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகலஎலக்ரோனிக் கடிகாரங்களின் பற்றரிகளும் விற்பனைக்கு உண்டு. (14613)

### வைத்திய சேவை

Dr. C. C. S. ராஜன் கிருஷ்ணா வைத்திய நிலையம், மார்க்கட்சந்தி,நாவாந்துறைக்கு மாற்றப்பட்டுளது (14638)

### கிளீன்கட் போட்டோஸ்ரற்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும் அடையாள அட்டைகட்கு கவரிட்டுக் கொள்ளவும் கிளீன் கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் யாழ். இந்து மகளிர் சந்திக்கு அண்மையில். (சி 5355)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. மு. சங்கரப்பிள்ளை அவர்கள்

தோற்றம்: 18 - 03 - 1904

மறைவு: 10 - 10 - 1990

எமது அன்புத் தந்தையாரின் மரண நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், வேறு பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக எல்லாம் வல்ல நயினை நாகபூஷணியின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பிரம்படி லேன்,
கொக்குவில். (சி-5390)

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. கணபதிப்பிள்ளை செல்வரத்தினம்
(விதானையார்)
ஓய்வுபெற்ற கிராமசேவை அலுவலர்

மலர்வு: 27 09 - 1926

உதிர்வு: 08 - 11 - 1987

திருநெல்வேலியில் வாழ்ந்த எம் ''செல்வமே''
ஆண்டு மூன்று தான் ஓடி மறைந்தாலும்-நின்
திருமுகம் எம் கண்ணில் இருந்து அகலாது
திகைத் திணறுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.

டயஸ் வீதி,
[வளாக ஒழுங்கை]
திருநெல்வேலி தெற்கு.
[சி-5389]

---

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

கலை, வர்த்தகம்
A/L 90, 91, 92
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம்: 11 - 11 - 1990
ஞாயிறு 8.00 A. M.
வழமையான ஆசிரியர் குழுவினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
[14715]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 30. 07. 1952

இறப்பு: 22. 10. 1989

திதி நாள்: 10. 11. 1990



நயினாதீவு
இராமலிங்கம் - துரைராசசிங்கம்
(உரிமையாளர் சிவாரேடர்ஸ், அச்சுவேலி)

நாம் இன்று இழந்து நிற்பது - எம்
அருமைக் குடும்பத் தலைவனை
அயலவர் இழந்ததுவே அருமைச் சினேகிதனை
இனசனத்தார் இழந்ததுவோ
தமக் கெல்லாம் இனியவனை!

மனைவி: கிருஸ்ணராணி,
மகன்மார்: ஜெயந்தன், ஜெயகரன்,
தாய், தந்தை, மாமாமார். மாமிமார்,
சிறியதாய், பெரியதாய், சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

நயினாதீவு- 5 (14281)

---

## நன்றி நவிலல்



திருமதி
மகேஸ்வரி பதஞ்சலிநாதன்

எங்கள் குடும்பத் தலைவியும், யாழ் / மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயத்தில் நீண்ட காலம் ஆசிரியராகவும் பதில் அதிபராகவும் சேவையாற்றி ஓய்வுபெற்றவருமான திருமதி மகேஸ்வரி பதஞ்சலிநாதன் அவர்கள் 3 - 10 - 90ல் மண்ணீத்து விண்சென்றபோது நிகழ்ந்த ஈமச்சடங்குகளில் நேரில் வருகைதந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துயரில் பங்குபற்றியும் பல்வேறு வழிகளில் உதவிகளும்புரிந்த உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், 2 - 11 - 90இல் நிகழ்ந்த வீட்டுக் கிருத்தியம், மகேசுர பூசைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எங்கள் அன்பார்ந்த நன்றியை பணிவன்புடன் செலுத்துகின்றோம்.

இங்ஙனம்
திரு. பதஞ்சலிநாதன்,
சகோதரிகள், பெறாமக்கள்,
78/3, 224/48, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


முத்துமாரி அம்மன் கோவில் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு: 31. 01- 1953

அநியாய அழிப்பு: 09- 11- 1988



சோமசுந்தரம் ஜெயக்குமார்
(வருமான மேற்பார்வையாளர், பிரதேசசபை, உபஅலுவலகம் - உடுவில்)

தாய்க்கு தலைமகனாய்
குடும்பத்தின் காவலனாய்
கண்ணை இமைகாப்பது போல் காத்தவனும் நீயன்றோ!
பாதி வழிதனிலே பாவிகள்
பறித்து விட்டார் உன் உயிரை
சிறிது காலம் வாழ்ந்தாலும்
பண்புடனே வாழ்ந்து மறைந்தாய்
ஆண்டிரண்டு சென்றாலும்
சிறகடிக்கும் உன் நினைவுகள்
எம்மை விட்டு நீங்காது.

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

தாய், தந்தை, உறவினர்கள்.

சண்டிலிப்பாய். (14642)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்டுக்குளி ... நூலகம்

# உதயன்

## இந்தியாவில் வீசும் சூறாவளி

இந்தியாவில் உருவான அரசியற் புயல் புதிய கட்டத்தை எட்டியுள்ளது. பதவியில் இருந்த அரசாங்கம் கவிழ்ந்துவிட்டது. பிரதமர் வி. பி. சிங் விலகிவிட்டார். அவற்றைத் தொடர்ந்து— புதிய பிரதமர் யார்? எந்தக் கட்சி அரசை அமைக்கப்போகிறது? தேர்தல்ஒன்று வருமா? — என்ற கேள்விகள் முளைத்துள்ளன!

இந்திய அரசியலில் ஸ்திர நிலை ஒன்று உருவாகுமா என்பதே முக்கிய கேள்வி.

கடந்த நான்கு தசாப்தங்களாக அங்கு பேணப்பட்ட சகோதரத்துவ சகவாழ்வு, சனநாயகம், சுதந்திர நீதித்துறை ஆகிய மரபுகளும், நெறிமுறைகளும் தொடர்ந்து நிலைக்கவேண்டுமானால் ஸ்திரமான, பலமான, உறுதியான ஓர் அரசாங்கம் தேவை.

கடந்த வருடம் நடந்த தேர்தலில், தாம் இழைத்த தவறுக்கான அறுவடையை இந்தியமக்கள் இப்போது அனுபவிக்கிறார்கள்: பலமான அரசாங்கம் ஒன்றை நிறுவமுடியாத அளவுக்கு அவர்களின் தீர்ப்பு அமைந்திருந்தால், பதினொரு மாதங்களிலேயே அரசுக்குக் கண்டம் ஏற்பட்டுவிட்டது. 1979 ஆம் ஆண்டில் நிகழ்ந்ததுபோல, காங்கிரசைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் ஆட்சி அமைத்து நீண்ட காலத்துக்கு ஆளமுடியாது என்பது மீண்டும் —இரண்டாவது முறையாக — இப்போது காண்பிக்கப்பட்டுள்ளது.

பல கட்சி முறை தாராளமாக இயங்கினாலும், ஒரு கட்சியே செல்வாக்கும், பலமும் உள்ள கட்சியாக நிலைத்திருக்கும் சனநாயகத்தின் பாதக விளைவு இந்தியாவில் தொடர்கிறது என்பது புலப்படுகிறது. இது எதனைக் காட்டுகிறது?

இந்தியா அளவில், விஸ்தீரணத்தில், மக்கள்தொகையில் பெரிய நாடாக இருப்பினும் மக்களுக்கு அரசியல் முதிர்ச்சி ஏற்படவில்லை என்பது தெட்டத்தெளிவாகின்றது. இரண்டாவதாக நாட்டைப் பற்றிச் சிந்திக்கும் அரசியல் ஞானிகளை விட, தேசாபிமானிகளை விட தேர்தலைப் பற்றிச் சிந்திக்கும் அரசியல் தலைவர்களே இந்தியாவில் அதிகம் என்ற நிலையும் நிரூபிக்கப் படுகிறது. அவர்கள் பதவிக்காக அடிபடுவதும், அடுத்தவன் மீது சேறு பூசுவதும், தட்டி வீழ்த்துவதும் அப்பட்டமாகத் தெரிவது பெரும் வெட்கக்கேடு.

மக்களுக்கு அரசியல் முதிர்ச்சியும், அவர்களை ஏமாற்றித் தொழில் நடத்தும் அரசியல் வாதிகளுக்குப் பதவிப்பற்றுக்குப் பதிலாக தேசப்பற்றும் உண்டாகும் வரை, இந்தியா ஐந்தாவது வல்லரசாக மாற முயற்சிப்பதில் பயனில்லை. உலகில் தனக்கு அற்புதமான "இமேஜை" உண்டாக்க வேண்டும் என்று நினைப்பதும் அர்த்தமற்றது.

முன் குறிப்பிட்ட அரசியல் முதிர்ச்சியும், தேசப்பற்றும் உண்டாவதில் காலதாமதம் ஏற்படுமானால், இந்தியாவில், மத, இன, சாதிச் சண்டைகள் கொடும் சூறாவளியாக மாறி நாட்டைச் சுக்கு நூறாக்கி விடும்.

## ஆஸ்பத்திரி எல்லைகளில் விளக்குகள்

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். ஆஸ்பத்திரி வலயத்தைச் சூழ உள்ள பாதுகாப்புப் பகுதியின் எல்லைகளில் அடையாள 'நியோன்' விளக்குகளை (லைற்றுக்களை) அமைக்கும் வேலைகளை மின்சார சபையின் யாழ். பொறியியலாளர் பிரிவு பொறுப்பேற்றுள்ளது.

பிரகாசமாக எரியும் இந்த விளக்குகள் பாதுகாப்புப் பகுதியின் எல்லைப் பகுதிகளில் 20 இடங்களில் பொருத்தப்படவுள்ளன.

யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள ஜெனரேட்டர்களின் மூலம் இவற்றுக்கு மின்சாரம் வழங்கப்படும். (ஒ-5)

## குவைத்திலிருந்து திரும்பியோருக்கு படிவம்

குவைத்தில் இருந்து திரும்பியவர்களுக்கு உதவிகள் வழங்குவதற்காக புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் படிவங்கள் நேற்று (வியாழன்) முதல் யாழ்- செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (இ-3)

# வடக்கிற்கு முத்திரைகள் அனுப்ப தலைமைத் தபாலகம் பின்னடிப்பு

## 5 மாத முயற்சி கைகூடவில்லை

யாழ்ப்பாணம். நவ. 9

யாழ். பிரதம தபாலகத்துக்கு தேவையான முத்திரைகளை அனுப்பி வைப்பதற்கு தலைமைத் தபாலகம் பின்னடிப்பதாக அறிய வருகிறது.

யாழ். மாவட்டத்துக்கு மாதம் ஒன்றுக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள் தேவை.

கடந்த ஜூன் மாதம் வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகியதில் இருந்து இன்றுவரை முத்திரைகள் எதுவும் அனுப்பி வைக்கப்படவில்லை. கடைசியாக ஜூன் மாதம் 10 ஆம் திகதியே முத்திரைகள் இங்கு அனுப்பப்பட்டன.

இது தொடர்பாக, பல தடவைகள் யாழ் பிரதம தபாலகத்தால் தலைமைத் தபாலகத்துக்கு அழுத்தமாகத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நிலையில் தமக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள் தேவைப்படுவதாக பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ - 6)

## மக்கள் வங்கிக்கு கப்பல் மூலம் பணம் வரும்

யாழ்ப்பாணம், நவ 9

மக்கள் வங்கி யாழ். பிரதான கிளைக்கு கப்பல் மூலம் பணம் வந்துசேர இருக்கிறது.

வார இறுதிக்குள் இங்கு வந்து சேரவிருக்கும் கப்பலில் வங்கிக்குரிய பணம் அனுப்பப்பட இருப்பதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை, தேசிய சேமிப்பு வங்கியும் கொழும்பில் இருந்து பணம் கொண்டுவர முயற்சி மேற்கொண்டுள்ளது. [ஒ-3]

## பயணிகளைக் கண்டுபிடிக்க உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 9

சுருவில் துறையில் இருந்து எழுவைதீவு நோக்கிச் சென்ற படகுக்கும் அதில் பயணம் செய்தவர்களுக்கும் என்ன நடந்தது?

இது குறித்துத் தகவல் பெறுவதற்குச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவி கோரப்பட்டுள்ளது.

''சாந்தா'' என்ற பிரஸ்தாப படகின் உரிமையாளரான திரு இ. சூசைப்பிள்ளை தமது படகினதும் அதில் சென்ற பயணிகளினதும் நிலை குறித்து அறிந்து அவர்களைக் கண்டுபிடிக்க உதவுமாறு செஞ்சிலுவைக் குழுவைக் கேட்டுள்ளார்.

நான்கு நாட்களுக்கு மேல் தேடியும் படகு கிடைக்கவில்லை என்றும் அவர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த மனுவை எழுவைதீவு பதில் கிராமசேவையாளர் உறுதி செய்திருக்கிறார்.

சுருவிலில் இருந்து புறப்பட்ட இரண்டு படகுகள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் அவற்றின் நிலை குறித்து எதுவும் தெரியவில்லை என்பதும் நேற்று முன்தின உதயனில் வெளியாகி இருந்தது தெரிந்ததே. [அ-3]

## வடமுனை மீது தாக்குதல் தொடங்குமாம்

கொழும்பு, நவ 9

மட்டக்களப்பு மாவட்டத்தில் வடமுனைப் பகுதியும் அதனை அண்டிய பகுதிகளும் இன்னும் படையினரின் கட்டுப்பாட்டில் வரவில்லை. அந்தப் பகுதிகளைக் கைப்பற்ற இன்னும் ஒருசில தினங்களில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்.

பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா கொழும்பில் வெளிநாட்டு ராஜதந்திரிகளைச் சந்தித்த போது மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். [அ-3]

## போலி 'கிரைப் வாட்டர்' விற்பனை கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 9

பொது மக்களின் புகார்களை அடுத்து மானிப்பாய், சுன்னாகம், பண்டத்தரிப்பு பகுதிகளில் போலி 'கிரைப் வாட்டர்' விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ் - மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் ரி. மகாதேவன் நடத்திய திடீர் பரிசோதனையில் இது கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பலபோலி கிரைப் வாட்டர் போத்தல்கள் பறிமுதல் செய்யப்பட்டன. [உ-15]

## வடக்கே சிமெந்து எடுத்துவர வவுனியாவில் தடை விதிப்பு

கிளிநொச்சி, நவ. 9

வடபகுதிக்கு சிமெந்து எடுத்து வருவதற்கும் வவுனியாவில் தடை விதிக்கப்படுகிறது.

கிளிநொச்சியில் உள்ள தனியார் வர்த்தக நிறுவனம் ஒன்று வவுனியா இராணுவ முகாமில் சிமெந்து எடுத்து வருவதற்கான அனுமதியை பெற்று கொழும்பில் இருந்து லொறி மூலம் சிமெந்து எடுத்து வந்தது.

சென்றியில் கடமை புரிந்த படையினர் சிமெந்து கொண்டு செல்ல அனுமதித்த போதிலும் அங்கே நின்ற ஆயுதம் தாங்கிய குழு ஒன்று இதனை ஆட்சேபித்ததாம்.

இதனைத் தொடர்ந்து இராணுவ முகாமில் சிமெந்து இறக்கப்பட்டு லொறி திருப்பி அனுப்பப்பட்டது.

லொறிச் சாரதியும் கிளீனரும் படையினரால் தாக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [சி-76]

## படகுச் சேவை நடத்த கூட்டுப்படை அனுமதி

யாழ்ப்பாணம், நவ. 9

நெடுந்திவு, நயினாதீவு, எழுவைதீவு ஆகியவற்றுக்கான படகுச் சேவைகளை ஆரம்பிக்க கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்பு கொண்டு சேவையை ஆரம்பிக்குமாறு யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து தீவுப் பகுதி உதவி அரசாங்க அதிபர்களைக் கேட்டுக் கொண்டார். [ஒ-3]

## மானிப்பாயில் திங்கள் முதல் தெல்லிப்பழை ஆஸ்பத்திரி

யாழ்ப்பாணம், நவ. 9

தெல்லிப்பழை ஆஸ்பத்திரியின் சகல பிரிவுகளும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் நடந்த ஒருசந்திப்பில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

தற்பொழுது மானிப்பாயில் இயங்கி வரும் யாழ் போதனா ஆஸ்பத்திரி இன்று வெள்ளிக்கிழமை முதல் நகரில்- பழைய இடத்திலேயே- இயங்க இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நடந்த விமானக் குண்டுவீச்சில் தெல்லிப்பழை ஆஸ்பத்திரி சேதமடைந்ததை அடுத்து அது மூடப்பட்டது என்பதும்-

அதன் சில பிரிவுகள் சங்கானை ஆஸ்பத்திரியில் இயங்கி வருகின்றன என்பதும் தெரிந்தவையே. (ஒ-5)

## சேதங்கள் குறித்து விவரம் திரட்டப்பட்டு வருகின்றது

யாழ்ப்பாணம், நவ 9

யாழ் - மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதத்துக்கு பின்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் விவரம் திரட்டப்பட்டு வருகின்றன.

தனியார் சொத்து, வணக்கஸ்தலங்கள், பொதுஸ்தாபனங்கள் என்று மூன்று பிரிவாக இந்த சேதவிவரங்கள் கிராம சேவையாளர்கள் மூலமாக சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை திணைக்களங்களுக்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து திணைக்கள தலைவர்கள் மூலமாக விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த விவரங்களை இந்த மாத இறுதிக்குள் சேகரிக்குமாறு அரச அதிபர் பணித்துள்ளார். (இ-3)

## ராணுவம் முன்னேறிய பகுதியில் சிக்கியவர் ஷெல்லுக்குப் பலி

மாவிட்டபுரத்தில் இராணுவம் முன்னேறிய பகுதியில் சிக்கியிருந்த விவசாயி ஒருவர் ஷெல் தாக்குதலால் மரணமானார்.

கடந்த 20ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம் பெற்ற போதும் சமீபத்தில் தான் இது குறித்து தெரிய வந்தது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் வடக்கு வீதியில் உள்ளவீட்டில் தமது மனைவி, மகன், சகோதரி ஆகியோருடன் இவர் இருந்த சமயம் இராணுவம் சுற்றி வளைத்தது.

வெளியேற முடியாத நிலையில் இருந்த இவரது வீட்டில் விழுந்த ஷெல்லால் இவர் மரணமானார்.

க. கதிரமலையான் (65 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

இவரது சடலம் மயானத்துக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் இவரது வீட்டிலேயே கிடங்கு வெட்டி அடக்கம் செய்யப்பட்டது. (இ - 3)

## அரசியல் தஞ்சம் வழங்குவதில் பிரிட்டன் கட்டுப்பாடு விதிக்கும்

லண்டன், நவ. 9

விடுமுறை மற்றும் படிப்பு ஆகிய காரணங்களைக்காட்டி விஸா பெற்று பிரிட்டன் செல்பவர்கள், அதற்கான காலம் முடிந்த பின்னர் அரசியல் தஞ்சம் கோரி செய்யும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும், தற்போதைய நடைமுறையை பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு மீளாய்வு செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரிக்கு விசேட படுக்கைகள்

## றோட்டரிக் கழகம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் பாவிப்பதற்கென, எட்டு விசேட படுக்கைகள் வந்து சேர்ந்துள்ளன.

சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியுள்ள இந்த நவீன படுக்கைகளை கொழும்பு றோட்டரிக் கழகம் யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்துக்கு அன்பளிப்புச் செய்திருந்தது.

அவை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் கொழும்பில் வைத்துக் கையளிக்கப்பட்டன. பிரஸ்தாப விசேட படுக்கைகள் இப்போது பருத்தித்துறை வந்து சேர்ந்திருக்கும் 'லங்காசிறி' கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ளன என்று செஞ்சிலுவை வட்டாரங்கள் தெரிவித்தன. [அ-5]

# 'ரஞ்சன் ஒரு போக்கிரி'; சபையில் வாசுதேவ!

## அதனால் பெரும் அமளி துமளி

கொழும்பு, நவ. 9

ஐக்கிய சோஷலிச முன்னணி எம். பி. திரு. வாசுதேவ நாணயக்காராவின்கேள்விக்கு பதில் அளிப்பதற்கு, பாதுகாப்பு துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்தினா மறுத்ததைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் அமளி துமளி ஏற்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடிய போதே இந்த அமளி துமளி ஏற்பட்டது.

வாசுதேவ தம்மை ''தக்கடியா'' (போக்கிரி) என்று நாடாளுமன்றத்தில் அழைத்ததாகவும், அதனால் அவர் கேட்கும் கேள்விகளுக்கு தம்மால் பதில் அளிக்க முடியாது என்றும் அமைச்சர் ரஞ்சன் கூறினார்.

அதைத்தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூச்சல் போட்டனர். சபையின் இருதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சூடான வார்த்தைகளைப் பரிமாறினர்.

திரு. வாசுதேவ ஒரு கட்டத்தில் அமைச்சர் ரஞ்சனைப் பார்த்து மீண்டும் ''ஹொற தக்கடியா'' (கள்ளப் போக்கிரி) என்றும் கூறினார்.

சபாநாயகர் அமைதியை ஏற்படுத்த முயற்சித்தார். ஆனால் முடியாது போகவே அவர் சபையை 15 நிமிடம் ஒத்திவைத்தார். (அ-3)

## வீர மரணம்

யாழ்ப்பாணம், நவ. 9

கடந்த செவ்வாயன்று மாவிட்டபுரத்தில் ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் காயமுற்ற மது [வடிவேல் ஆனந்தன் - மீசாலை வடக்கு] என்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி நேற்று முன்தினம் வீரமரணமடைந்தார். [உ]


# அறிவித்தல்

## நியூ சயன்ஸ் அக்கடமி

கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்

### க.பொ.த. (உயர்தரம்) 90, 91, 92

எமது கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் 10 - 11 - 90 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கன்னாதிட்டி அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- புதிய அனுமதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(14716) நிர்வாகம்.


# 31 ஆம் நாள் அஞ்சலி

## திருமதி மகேஸ்வரி பரமசாமி

இவ்வுலகம்:
29 - 09 - 1941

அவ்வுலகம்:
11 - 10 - 1990



இமையாணன் உடுப்பிட்டியைச் சேர்ந்த மகேஸ்வரியின் அந்தியேட்டிக் கிரியைகள் 10-11-1990 [சனிக்கிழமை]காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
இ. பரமசாமி [தாதி உத்தியோகத்தர், மந்திகை]
பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.
[14710]

# பட்டதாரி ஆசிரியருக்கு சம்பள நிலுவை

கொழும்பு, நவ 9

பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெறாது பணி புரிந்து வரும் சகல பட்டதாரிகளுக்கும், மூன்று வருட சம்பள உயர்வுகளுக்கு சமமான தொகை இந்த ஆண்டு ஜனவரி முதல் வழங்கப்படும்.

அமைச்சரவை இந்த முடிவை எடுத்து இருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

ஆசிரிய பயிலுநர்களாகப் பணிபுரியும் பட்டதாரிகளும் இந்தத் தொகையைப் பெறுவர் என்றும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (ஒ எ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். மாவட்டத்திலுள்ள ஐக்கிய நாணய சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நீர்வேலி ப. நோ. கூ. சங்கமண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

தமிழீழ மாவீரர் நாள் சம்பந்தமாக அங்கு கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## ஓய்வூதிய வவுச்சர்

யாழ்ப்பாணம், நவ. 9

ஓய்வூதியர்களுக்கான செப்டம்பர் மாத வவுச்சர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்பட இருக்கின்றன.

இந்த வவுச்சர்கள் செயலகத்துக்கு இரண்டு வாரத்துக்கு முன்னரே வந்து சேர்ந்த போதும், கொழும்பில் இருந்து கட்டுநிதி வந்து சேராததால், ஓய்வூதியர்களுக்கும் வங்கிகளுக்கும் அனுப்பப்படாமல் வைக்கப்பட்டிருந்தன. (ஒ-3)

## சரத்தின் மகன் தற்கொலை

கொழும்பு, நவ. 9

கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரும், முன்னாள் எம். பியுமான காலஞ்சென்ற சரத் முத்தெட்டுவேகமவின் மகன் தற்கொலை செய்துள்ளார்.

20 வயது மாணவனான ஹரேஷ் மைத்திரி தமது வீட்டில் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்ததாக மரண விசாரணையின் போது அவரின் தாயாரான மனோரி தெரிவித்தார்.

சரத் முத்தெட்டுவேகம 1986ஆம் ஆண்டில் வாகன விபத்தொன்றில் மரணமானார் என்பது தெரிந்ததே. (அ-3)

## யாழ். செயலக....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதத்துக்கு 9 கோடி 60 லட்சம் ரூபா நிதி தேவை. கடந்த ஜூன் மாதத்தில் இருந்து செப்டம்பர் மாதம்வரையான 5 மாதகாலத்துக்கு 48 கோடி ரூபா மொத்தமாகத்தேவைப்பட்டது.

ஆனால் ஜூன் மாதத்துக்குப் பின்னர் ஜூலை மாதத்தில் 5 கோடி ரூபா அனுப்பப்பட்டது. அதன் பின்னர் இப்போதுதான் மேலும் 5 கோடி ரூபா அனுப்பப்பட்டுள்ளது. (உ-3)

## நோயாளரை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளரைப் பார்க்கும் எல்லோரும் ஒவ்வொருவராக வார்ட்டுக்குள் செல்ல முடியும்.

நோயாளரை வார்ட்டில் பார்க்கும் நேரங்கள்:-

நண்பகல்: 12 மணி முதல் 1 மணி வரையும்.

மாலை: 4 மணி தொடக்கம் 5 மணி வரையும். [அ-3]

# நிவாரணமாக வழங்க 'ஷேவிங் றேசர்', 'பிளேட்'!

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். மாவட்ட மக்களுக்கு இதுவரை உணவுப் பொருள்களும், இன்னும் சில அத்தியாவசியப்பொருள்களும் நிவாரணமாக வழங்கப்பட்டு வந்தன.

இனி முகச்சவரம் செய்ய 'றேசரும்' நிவாரணமாக (இலவசமாக) வழங்கப்பட இருக்கிறது.

'குமண' கப்பலில் முகச்சவர றேசரும் சவரஅலகுகளும் வந்து சேர்ந்துள்ளன.

இவை ப. நோ. சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

# வெளியில் இருந்தே ஆதரவு காங்கிரஸ் வழங்கும்!

புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் சந்திரசேகருக்கு அரசுக்கு வெளியில் இருந்து கொண்டு ஆதரவளிக்கப்போவதாக இந்திரா காங்கிரஸ் நேற்று உத்தியோகபூர்வமாக ஜனாதிபதிக்கு அறிவித்தது.

இந்திராகாங்கிரஸ்தலைவர் ராஜீவ்காந்தி இதனைத் தெரிவிக்கும் கடிதம்ஒன்றைஜனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைத்தார்.

இதனிடையில் -

புதிய அரசு அமைப்பதற்கு சந்திரசேகர் அழைக்கப்படக்கூடாது என்று ஜனாதிபதிக்கு காபந்து பிரதமர் வி.பி. சிங்கும் ஜனதா தள் தலைவர் எஸ். ஆர். பொம்மையும் நேற்று அறிவித்தனர்.

அதே வேளை -

புதிய அரசு அமைப்பது பற்றிய பூர்வாங்க பேச்சுக்களை திரு. சந்திரசேகர் நேற்று ஆரம்பித்தார்.

அ.தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் சேடப்பட்டி முத்தையா, ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமிஆகியோருடன் சந்திரசேகர் பேச்சுக்களை நடத்தினார். [உ-எ]

## ஆதரவு அளிப்பது ஏன்?

புதிய அரசு அமைக்க சந்திரசேகருக்கு ஆதரவு அளிப்பது என்ற முடிவை விளக்கி செய்தியாளர்களிடம் ராஜீவ் காந்தி சொன்னதாவது;

சந்திரசேகர் முன்னாள் காங்கிரஸ்காரர்.

வி. பி. சிங் போன்று பாரதீய ஜனதா கட்சியுடன் கூடிக் குலாவியவர் அல்லர் அவர்.

நாட்டை, இன்றைய இக்கட்டான நிலையில் நல்லபடி வழி நடத்திச் செல்லக் கூடியவர் யார் என்பதை அறிவது தான் ஜனாதிபதியின் இன்றைய நிலை.

சந்திரசேகருக்கு நாடாளுமன்றத்தில் 280 எம்.பிக்களின் ஆதரவு இருக்கும் போல் தெரிகிறது— என்றார். [உ-எ]

## வளைகுடாவில். : .

ஒன்றை விடுத்துள்ளார்.

இவற்றை நோக்கும்போது வளைகுடாவில் யுத்தம் வெடிப்பது தவிர்க்கமுடியாததாகி வருவதாக அவதானிகள் தெரிவித்தனர்.

**மாஸ்கோவில் ஜேம்ஸ் பேக்கர்**

இந்த நிலையில் ஈராக்கிற்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு சோவியத் அரசிடமிருந்து சம்மதம் பெறும் பேச்சுவார்த்தைகளை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் நேற்று மாஸ்கோவில் ஆரம்பித்துள்ளார்.

**பிரிட்டன் எச்சரிக்கை**

இதேசமயம்—

குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறாவிட்டால் விரைவில் இராணுவ ரீதியான நடவடிக்கையை சந்திக்கவேண்டி ஏற்படும் என்று பிரிட்டிஷ் பிரதமர் மார்க்ரட் தட்சர், ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனை எச்சரித்திருக்கிறார்.

''காலம் போய்க்கொண்டு இருக்கிறது. ஒன்றில் சதாம் ஹுசேனின் படைகள் குவைத்தில் இருந்து தானாக வெளியேறவேண்டும்; இல்லையேல் நாம் வெளியேற்ற வேண்டி ஏற்படும்''— இப்படி தாட்சர் சொன்னார்.

பிரதமர் தாட்சரின் எச்சரிக்கையைத் தொடர்ந்து, லண்டன் சந்தையில் எரிபொருள் விலை கணிசமாக உயர்ந்தது.

**சீனா வீட்டோ செய்யாது**

இது இவ்வாறிருக்க, ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க அமெரிக்காவுக்கு அனுமதி வழங்கும் தீர்மானம் ஐ. நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கொண்டு வரப்படின், அத் தீர்மானத்தை சீனா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச் செய்யாது.

சீன வெளியுறவு அமைச்சர், மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்த சமயம், அமெரிக்க வெளியுறவு அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களின் போது முன்கண்ட உறுதிமொழியை அளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## அரசை....

கலைத்துப் பொதுத் தேர்தலை அறிவிக்கும்படி கோரினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸீய கம்யூனிஸ்ட், புரட்சிகர சோஷலிஸ்ட் கட்சி, போர்வேட் புளொக் ஆகியவை அடங்கிய இடதுசாரிக் கூட்டணியினரிடமும் ஆட்சியை அமைக்க முடியுமா என ஜனாதிபதி கேட்டிருப்பதாகவும்-

அதற்கான பதிலை ஜனாதிபதி எதிர்பார்த்திருப்பதாகவும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

புதிய அரசை அமைக்க தாம் தயார் என்று ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் நேற்றுக் காலையில் அறிவித்த போதிலும் நேற்று நள்ளிரவு வரை ஜனாதிபதியிடமிருந்து அவருக்கு அழைப்பு ஏதும் கிடைக்கவில்லை.

ஜனாதிபதி எந்த நேரத்திலும் தம்மை அழைக்கக்கூடும் என தாம் எதிர்பார்த்திருப்பதாக சந்திரசேகர் தெரிவித்தார். (உ)

## படையினர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இழுக்க முற்பட்டபோது தாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் —

பின்னர் படையினர் 3படகுகளில் வந்து சேதமுற்ற படகை கட்டி இழுத்துச் சென்றதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [உ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org